EELA NADU LTD.

Registered as a Newspaper in Ceylon ★ விலை ★ சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (26-1-66) இதழ் 347

விசுவாவசு தை 13 ஷவ்வால் பிறை 3 புதன்கிழமை

## ஐ. ஜி. பி. க்கு கட்டாய லீவு!

கொழும்பு, செவ்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு.எஸ். ஏ. திஸநாயக்கா கட்டாய லீவில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளாரென்றும், கொழும்பு பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. வான்டுவெஸ்ட் தற்காலிகமாகப் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளாரென்றும் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

இம்மாதம் 8-ம் தேதி நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதே இவர்கள்மீது இந்த நடவடிக்கை எடுக்க காரணமென்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வான்டுவெஸ்ட் தற்காலிக வேலை நீக்கம்

# இனத் துவேஷத்துக்கு முற்றுப்புள்ளி

## சட்டமூலம் நடவடிக்கைவேண்டும் என்று அரசாங்க குழு தீர்மானம்

கொழும்பு, செவ்.

**சாதி, சமய, இனத்துவேஷங்களுக்கு இந்த நாட்டில் நிரந்தரமான முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டுமென்று அரசாங்கப் பார்லிமெண்டரிக் குழு தீர்மானித்துள்ளது.**

அரசாங்கப் பார்லிமெண்டரிக்குழு இன்றுகூடியபொழுது, அவசரகால நிலைமை குறித்து ஆராயப்பட்டது. கடந்த எட்டாம் திகதி கொழும்பில் நடைபெற்ற பல்வேறு பலாத்காரச் சம்பவங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது.

### "கடும் நடவடிக்கை"

இந்த நாட்டில் முழு அமைதி நிலவுவதற்கு சகல இனத்துவேஷ சக்திகளுக்கும் எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எம். பி.க்கள் பலரும் இக்கூட்டத்தில் வற்புறுத்தியதாகத் தெரியவருகிறது.

### தீர்மானம்

சாதி, சமய, இனத்துவேஷங்களைத் தூண்டும் பிரசுரங்கள் வெளியிடுவதைத் தடைசெய்யும் சட்டம் கொண்டுவரப்படவேண்டுமென்றும் இப்பொழுது அமுலிலுள்ள அவசரகால நிலைமை முடியுமுன்னரே இச்சட்டம் பார்லிமெண்டில் தாக்கல் செய்யப்பட்டு சட்டமாக்கப்படவேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சாதி, சமய, இனத்துவேஷத்தைத் தூண்டுபவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பலாத்காரம், மற்றும் இதனைத் தூண்டுதலும் பெரும் குற்றங்களாக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## சாஸ்திரியின் அஸ்தி திருவேணியில் கலந்தது

அலகபாத், ஜன.25

இராணுவத்தினரின் வாத்திய சோக இசை ஒலிக்க, ஹெலிகாப்டர்கள் பூமாரி பொழிய காலஞ்சென்ற இந்தியப்பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியின் அஸ்தியை அவரது மூத்த புதல்வன் ஹரிகிருஷ்ணன் திருவேணி சங்கமத்தில் கரைத்தார். இந்த வைபவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபல்லாயிரக்கணக்கான மக்கள் மனம் நெகிழ்ந்து கண்ணீர் விட்டனர். இந்த வைபவம் இன்று பகல் பத்து ஐம்பதுக்கு நடைபெற்றது.

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியின் அஸ்தி, அலகபாத்தில் திருவேணியில் கரைக்கப்படுவதற்காக நேற்று எடுத்துச் செல்லப்பட்டது. செப்புக்கலசத்தில் வைக்கப்பட்ட அஸ்தி, புஷ்ப அலங்காரம் செய்யப்பட்ட பீரங்கி வண்டியில் டில்லி வீதிவழியாக ரயில் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அஸ்தியை அலகபாத்துக்குக் கொண்டு செல்லும் விசேஷ ரயில் இன்று காலை சுமார் பத்து மணியளவில் அலகபாத் வந்தடைந்தது. விசேஷ ரயில் வண்டியில் சாஸ்திரியின் உற்றார் உறவினர்களும் காபினட் மந்திரிகளும் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

விசேஷமாக அமைக்கப்பட்டிருந்த மேடையிலிருந்து அஸ்தி கரைப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டபொழுது மறைந்த தங்களது தலைவருக்கு அங்கு குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மௌன அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டனர். அப்பொழுது பீரங்கியும் ஒரு தடவை முழங்கி ஓய்ந்தது.

அஸ்திக்கலசம் கரையை அடைந்ததும் அங்கு தயாராக நின்ற இராணுவ படகொன்றில் அவை வைக்கப்பட்டன. இராணுவப் படகு மெல்ல மெல்ல நகர்ந்து சென்றது. அப்பொழுது இராணுவ இசை முழங்கப்பட்டது. சாஸ்திரியின் புதல்வர் ஹரிகிருஷ்ண அஸ்திக் கலசத்தை எடுத்து நீரில் கரைத்தபொழுது, மேலே நின்றுகொண்டிருந்த ஹெலிகாப்டர் விமானங்கள் பூமாரி பொழிந்தன. நீருடன்நீராக அஸ்தி கரைந்துவிட்டது.

## "சாஸ்திரியின் தீரம் நாட்டை வலுப்படுத்தியது"

### அஸ்தி கரைப்பின்போது ஐந்து லட்சம் மக்கள் அஞ்சலி

அஸ்தி கரைப்பு வைபவம் முடிவடைந்ததும் ஆற்றங்கரையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. திரு. காமராஜர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மறைந்துபோன சாஸ்திரியின் சேவையைப் பாராட்டிப் பலர் பேசினர்.

திரு. காமராஜர் பேசுகையில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் போது சாஸ்திரி காட்டிய தீரம் நாட்டின் அந்தஸ்தைப் பெரிதும் உயர்த்திவிட்டது என்று கூறினார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி பேசுகையில், சமாதானத்துக்காக வாழ்ந்து சமாதானத்துக்காகவே உயிர்நீத்தவர் சாஸ்திரி என்று பாராட்டினார்.

இரண்டு ஆண்டுக் காலத்துக்குள் இரண்டுதடவைகள் நான் அனாதையாகிவிட்டேன்" என்றும் பிரதமர் இந்திரா காந்தி கூறினார்.

இன்றுநடைபெற்ற இறுதி வைபவத்தில் ஐந்து லட்சம் மக்கள் கலந்துகொண்டனர். சாஸ்திரியின் அஸ்தி இன்று நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள புனித ஆறுகளில் கரைக்கப்பட்டது.

## ஏழு நாட்களாகியும் மீனவரைக் காணவில்லை?

யாழ்ப்பாணம், புதன்

மன்னாரிலுள்ள சிலாபத்துறைக்கு மீன்பிடிக்கச் சென்று கடந்த புதன்கிழமை அங்கிருந்து திரும்பிய பருத்தித்துறையிலுள்ள சக்கோட்டையைச் சேர்ந்த ஐவர் இன்னும் வந்துசேரவில்லையென்றும், அவர்களைப் பற்றி எதுவித தகவல்களும் சரிவரக் கிடைக்கவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பி. ஆபிரகாம், ஏ சவரிமுத்து, பி. பாலசுந்தரம், வி. எஸ்தாக்கி, ஆசீர்வாதம் என்ற இந்த ஐவரும் சக்கோட்டையில் இருந்து வழக்கமாக இங்கிருந்து படகில் மன்னாரில் உள்ள சிலாபத்துறைக்கு மீன்பிடிக்கச்செல்வதாகவும் அப்படி இம்முறை சென்று வேலையை முடித்துவிட்டு சென்ற புதன்கிழமை திரும்பிய அவர்கள் இன்னும் வந்து சேரவில்லையென்று கூறப்படுகிறது.

இது குறித்து பொலிசாருக்கும் கடற்படைப் பகுதியினருக்கும் அறிவிக்கப்பட்டு, அவர்களை தேடுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

# இந்திய-பாக் படைகள் வாபஸ்

## பெப்ரவரி 25-க்குள் படைவிலக்கல் பூர்த்தியாகும்

புதுடில்லி, ஜன.25

**தற்போதுள்ள கட்டுப்பாட்டுகோட்டிலிருந்து ஆயிரம் யார் தூரத்துக்கு இந்திய, பாகிஸ்தான் துருப்புக்கள் இன்று வாபஸாகத் தொடங்கியதன் மூலம் சரித்திரப் பிரசித்திபெற்ற டாஷ்கண்ட் பிரகடனத்தின் இரண்டாவது கட்டம் செயல்படத் தொடங்கியுள்ளது.**

யுத்தக்கைதிகளைப் பரிவர்த்தனை செய்வது, எல்லைகளிலிருந்து துருப்புகள் (ஆகஸ்ட் 5-நிலைக்கு) வாபஸ்பெறுவது சாஸ்திரி—அயூப்கான் கூட்டுப்பிரகடனத்தின் அம்சங்களாகும்.

தத்தம் நிலைகளிலிருந்து ஆயிரம்யார் தூரத்துக்குப் பின்வாங்கும் நடவடிக்கை இன்று அதிகாலையிலிருந்து ஆரம்பமானது.

### பேச்சு நடத்தினர்

கடந்தவாரம் இந்திய — பாகிஸ்தான் இராணுவத் தலைவர்கள் புதுடில்லியில் படைவிலக்கல் குறித்துப் பேச்சுக்கள் நடத்தியிருந்தனர். இந்தப் பேச்சுக்களின் முடிவில்; செப்டம்பர் மாதம் நடைபெற்ற பாகிஸ்தான் — இந்திய சண்டையின்போது முன்னேறிய இடங்களிலிருந்து முன்னர் இருந்த நிலைக்கு இருதேச துருப்புகளும் வாபஸாகுவதென்றும், இந்த நடவடிக்கையைப் படிப்படியாக அமுல்செய்வதென்றும் தீர்மானித்தனர்.

### படிப்படியாக

1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதிக்கு இருந்த நிலைக்கு இருநாட்டுத் துருப்புகளும் வாபஸாக வேண்டும் என்பது டாஷ்கண்ட் பிரகடனத்தின் ஓர் அம்சமாகும். இதனைப் படிப்படியாக அமுல்செய்வதென்று இருநாட்டு இராணுவத் தலைவர்களும் முடிவு செய்துள்ளனர்.

படைகளை விலக்குவதை சிறிதுசிறிதாக அமுல்செய்து பெப்ரவரிமாதம் 25-ந் திகதிக்குள் முற்றாக நீக்குவதென்று இரு நாட்டு இராணுவத்தலைவர்களும் தீர்மானித்துள்ளனர்.

### புதுடில்லி உடன்படிக்கை

இந்தியா வந்திருந்தபாகிஸ்தான் இராணுவத் தலைவர் மூஸாவுக்கும் இந்திய இராணுவத்தலைவர் ஜெனரல்

(8-ம் பக்கம் பார்க்க)

## மேலும் ஐந்து இரட்டைத்தட்டு பஸ் யாழ்ப்பாணம் வருகின்றன

நல்லூர், செவ்வாய்

யாழ்ப்பாணப் பகுதியில் பஸ் சேவையை சீராக்கும் பொருட்டு ஐந்து இரட்டைத் தட்டு பஸ்கள் இங்கு அனுப்பப்படவிருக்கின்றன. சில தினங்களுக்குமுன் 3 இரட்டைத்தட்டு பஸ்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இவ்வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கு ஐந்து இரட்டைத்தட்டு பஸ்களும் முல்லைத்தீவுக்கு ஒரு இரட்டைத் தட்டு பஸ்ஸும் அனுப்பப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தரிசனங்கள் பாரிப்பதை விட நோயாளருக்கும் தேவைப்பட்டவர்களுக்கும் உதவி செய்வதும், பசித்தோருக்கு உணவளிப்பதும் மேலானதாகும்.

—சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 359

யாழ [illegible] ஆண்டு தை 13 (26-1-66)


## வாழ்க பாரத சமுதாயம்!

"முப்பது கோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும்பொதுவுடைமை, அது ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொருபுதுமை, வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே!" இது மகாகவி பாரதியாரின் வாக்கு. இப்படி அவர் பாடியபின் பாரதநாடு பிளவு படுத்தப்பட்டு சுதந்திரமடைந்தது. பிரிவினை செய்யப்படினும் மக்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட 50 கோடிக்கு வளர்ந்து விட்டது. உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாக இது திகழ்கின்றது. நீண்ட காலமாக அடிமைப் பட்டுக் கிடந்த பாரதநாடு, அரசியல் விடுதலை அடைந்து 18 ஆண்டுகளாகின்றன. பின்னர் அது குடியரசாகவும் பிரகடனப்படுத்தப் பட்டது. இன்று ஜனவரி 26-ம் திகதி பாரதநாட்டின் குடியரசுத் தினம். இந்தப் பெருநாளில் ஈழப் பொது மக்களின் நல்வாழ்த்தை இந்தியப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

இந்தியா அரசியல் விடுதலை பெற்றும் பொருளாதார விடுதலையை இன்னும் அடையவில்லை, 4 ஐந்தாண்டு திட்டங்களை வகுத்து கைத்தொழில், நீர்ப்பாசனம், மின்சக்தி முதலியவற்றை அபிவிருத்தி செய்து வருகின்றார்களெனினும் முன்னேற்றம் தேவையான அளவு வேகத்தில் இல்லை. ஜனத்தொகை பெருகிவருவதாலும், மழையின்மை முதலிய இயற்கைக் காரணங்களாலும் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. போதாக் குறைக்கு பாகிஸ்தான், சீனச் சண்டைகளால் நெருக்கடி ஏற்பட்டு, நாட்டின் வருமானத்தில் பெரும் பகுதி யுத்தச் செலவுகளுக்கு வீணாயின. ஆக்க வேலைகள் பாதிக்கப்பட்டன. சிலவெளிச் சக்திகள் உதவி செய்வதற்குப்பதில் உபத்திரவம்செய்தன உள்நாட்டிலே மொழி, மத விபவ பல பிரச்னைகள். இவ்வளவு சோதனைகள் மலை மலையாகஏற்பட்டும், இவற்றையெல்லாம் பாரத நாட்டுப் பெருந்தலைவர்கள் விசேஷ துணிச்சலுடன் வெற்றி கரமாகச் சமாளித்து வருவதைக் கண்டு, உலக நாடுகள் பலவும் வியந்து பாராட்டும்படி இருக்கின்றது!

நேற்று முந்தினம் ஸ்ரீமதி இந்திரா காந்தி பிரதம மந்திரிப் பதவியாகிய பெரும் பொறுப்பை ஏற்றார். இந்தியா முதலிய கீழ்த்திசை நாடுகள் பிற்போக்கானவை என்றும், பெண்களை அடக்கி வைத்து தலைதூக்கவிடாமல் தடுப்பதாகவும் ஓர் அவதூறு மேலை நாட்டினரால் கூறப்படுவதுண்டு. ஆனல் அந்நாடுகளில் இல்லாதபடி, உலகிலேயே பெரும் ஜனநாயக நாடாகிய இந்தியாவின் பிரதம மந்திரியின் பதவிக்கு, ஒரு பெண் மணியை இந்தியா ஒப்புவித்திருப்பது [illegible] வதூறைப் பொய்ப்பிப்பதுடன், மற்ற நாடுகளுக்கெல்லாம் ஒரு நல்ல முன்மாதிரியாகவும் திகழ்வதாகும்.

அவர் பதவி ஏற்கும் சமயத்தில் இந்தியா-பாகிஸ்தான் சண்டை சுமுகமாகத்தீரவும், இருதரப்பினரும் இனி சண்டையில்லாமல் தங்கள் சிக்கல்களை சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளவும் டாஷ்கண்டில் முன்வந்துள்ளதுடன் அதைப்பின்பற்றி இருதரப்புத் துருப்புகளும் வாபஸ் பெறப்படுவதும், கைதிகள் பரிவர்த்தனை செய்யப்படுவதும் நல்ல அறிகுறிகள். இப்பெரும் சிக்கலைத்தீர்த்து, நல்ல சூழ்நிலை ஏற்படுத்திய சாஸ்திரி அவர்கள் செய்த அரும்பணி, இந்தியாவின் எதிர்காலத்துக்குப் புதிய நம்பிக்கை அளிப்பதுடன், புதிய பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி அவர்களின் சங்கடங்களையும் பெரிதும்குறைப்பதாகும். இந்தச் சமாதானச் சூழ்நிலை இருநாடுகளின் நல்லுறவைப்பலப்படுத்தி பரஸ்பரஒத்துழைப்புக்கும் வழி செய்யுமாயின் மற்றும் பல பிரச்னைகளும் தீர இது பெரிதும் உதவியாகஇருக்கும். சிறப்பாக புதுசீனத்துடன் ஏற்பட்டுள்ள எல்லைத்தகராறும் இனிஅமைதியாகத் தீரவும், சீன-இந்திய உறவுகள் மேம்படவும் வழி ஏற்படலாமென்று நம்புவதும் மிகையன்று.

ஏற்கெனவே நாம்குறிப்பிட்டுள்ளதுபோல் இந்தியா சமாளிக்கவேண்டிய பிரச்னைகளில் இப்போது மிகமுக்கியமானது உணவுப்பஞ்சமே. ''இனி ஒரு விதிசெய்வோம் அதை எந்த நாளும் காப்போம். தனி ஒருவனுக்குணவில்லை எனில் ஜகத்தினை அழிப்போம்' என்று கர்ஜித்தார் பாரதியார், உணவுப்பஞ்சத்தால் இந்தியாவில் பொதுமக்களின் பொறுமை சோதிக்கப்பட்டு, ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்குமே ஆபத்துஏற்படுமோஎன்று அஞ்சக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. உலகிலே சிறப்பாக ஜனநாயகத்தையும், அமைதியையும் பலப்படுத்தப்போவதாகக்கூறும் வல்லரசுகளும், இச்சமயம் பாரத மக்களின் உதவிக்குச் செல்லவேண்டியது பல விதங்களிலும் அவர்களது கடமை.

ஸ்ரீமதி இந்திராகாந்தியின் தலைமையில் இந்தியக் குடியரசு பழைய உள்நாட்டு வெளிநாட்டுச் சோதனைகளிலிருந்து விடுபட்டு அதற்குப் புதியதோர் சகாப்தம் ஆரம்பமாகுமென்றே நம்புகிறோம். இந்தப் புதிய சகாப்தத்தில் இந்திய மக்களின் இன்னல்கள் தீரவும் இலங்கை-இந்திய நட்புறவுகள் ஒத்துழைப்பும் பலப்படவும், பொதுவாக தென்கிழக்கு ஆசியாவில் சமாதானமும் சுபிட்சமும் ஓங்கவும் வழி பிறக்குமென்றே ஈழத்துப் பொதுமக்கள் நல்லெண்ணத்துடன் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றனர். வாழ்க பாரத சமுதாயம்!

---

இன்று இந்திய குடியரசு தினம்

# இந்திய சாஸனத்தில் அடிப்படை உரிமைகள்

**இந்தியாவில் அடிப்படை உரிமைகள் எவ்விதம் செயல்படுகின்றன என்பதை ஆராயும் இக்கட்டுரை இந்தியாவின் குடியரசு தினத்தையொட்டி இங்கு வெளியிடப்படுகிறது.**

இது திரு. பி. கொடான்ட ராவ் எழுதிய கட்டுரையின் சுருக்கம்.

உலகின் முக்கிய அரசியல் சாஸனங்கள்பலவற்றை ஆராய்ந்தறிந்த பின்னரே இந்திய அரசியல் கமிட்டி அரசியல் சாஸனத்தைஇயற்றியது. பிரிட்டனின் பாராளுமன்ற முறையும், அமெரிக்காவின் அடிப்படை உரிமைமுறையும், அயர்லாந்தின் அரசியல் கொள்கையும் இந்திய அரசியல் சாஸனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் சாஸனத்தின் மூன்றும் பாகத்தில் அடிப்படைஉரிமைகள்பற்றி குறிப்பிடப்படுகிறது. இந்தப் பாகத்தில் 24 உள்பிரிவுகள் உள்ளன. அடிப்படை உரிமைகள் நீதிபரிபாலனத்தின் மூலம் நிலைநாட்டப்படக்கூடியவை.

இந்திய அரசியல் சாஸனத்தில் உள்ள அடிப்படை உரிமைகள், அனேகமாக அமெரிக்கா போன்ற ஜனநாயக நாடுகளின் சாஸனங்களில் உள்ள அடிப்படை உரிமைகளைப் போலவே உள்ளன.

ஒரு நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவரினதும், சிறுபான்மை மதத்தினரதும், சிறுபான்மை கலாச்சாரத்தினரதும் உரிமைகளைப் பெரும்பான்மையாக உள்ளவர்கள் சட்டமூலம் நசுக்குவதற்கு அடிப்படை உரிமைகள் இடமளிக்கவில்லை. சிறுபான்மையினர் ''இயற்கை'' யான உரிமைகளை அவை உறுதிப்படுத்துகின்றன.

### இந்திய சாஸனம் என்ன கூறுகிறது?

தனிப்பட்ட ஒருவனின் அடிப்படை உரிமை சமூகத்தின் நலனுக்கு கட்டுப்பட்டதாக இருக்கவேண்டுமேயொழிய அதற்குமேற்பட்ட முக்கியத்துவம் அளிக்கப்படக் கூடாது என்பதைச் சர்வதேசங்களும் அங்கீகரித்துள்ளன. இந்தக் கட்டுப்பாட்டை அளிக்கும் அதிகாரம் எது என்பதில் இந்திய சாஸனமும், அமெரிக்க சாஸனமும் வேறுபடுகின்றன.

இந்தியாவின் சாஸனத்தில் உள்ள அடிப்படை உரிமைகள் சரத்துக்களின் படி பிரஜை ஒருவரின் பேச்சு சுதந்திரம், அவரது நடவடிக்கைகள், அவரதுதொழில் சொத்து உரிமை என்பனவற்றிற்கு எவ்வித கட்டுப்பாடு இருக்கவேண்டுமென வரையறுத்துள்ளது நாட்டு நலன் பாதுகாப்பு கருதிஒருவரின் பேச்சு சுதந்திரம் கட்டுப்படுத்தப்படவும், வெளிநாடுகளுடனை அவரது தொடர்புகள், அவரது பொது ஒழுங்கு முறைகள், ஒழுக்கம், சீர்மை, நீதிமன்றத்தை அவமதித்தல், மான நஷ்டம், குற்றங்களுக்கு உடந்தையாக இருப்பது பற்றிய விஷயங்கள் கட்டுப்படுத்தப்படவும் இந்தியசாஸன சரத்துக்கள் வகைசெய்கின்றன. வரையறுத்துக் கூறுகின்றன' ஆனல் அமெரிக்க சாஸனத்தில் இவ்விதம் வரையறுத்துக் கூறப்படாமையால், அந்தக்குறையை சுப்ரீம் நீதிமன்றங்கள் சந்தர்ப்பத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப சமாளித்து வருகின்றன.

### சமத்துவமான பாதுகாப்பு

இந்தியாவின் அரசியல் சாசனம், அங்குவாழும் ஒவ்வொருவருக்கும், 'அவர்பிரஜையாக இருப்பினும் அல்லது வெளிநாட்டாராக இருப்பினும்) சட்டத்தின் முன்னல் சமத்துவமான பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கின்றது. மதம், இனம், சாதி, பால், பிறந்த இடம் என்பனவற்றுக்காக எவர் மீதும் வேற்றுமை காட்டப்படாமலிருக்கவும் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது.

(6-ம் பக்கம் பார்க்க)

---

ஆசிரியருக்குக் கடிதம்

# யாழ்ப்பாண பஸ் நிலையத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

யாழ்ப்பாண பஸ்நிலையம் சம்பந்தப்பட்ட விஷயம் அதிகாரத்தில் உள்ளோருக்கு அக்கறை இல்லாத விஷயமாக இருக்கலாம். ஆனல் அன்றன்றுடு பிரயாணம்செய்யும்ஏழைப் பிரயாணிகளுக்கு இது சொல்லொணு வேதனையையும் துன்பத்தையும் கொடுப்பது மட்டுமல்ல, சில சமயத்தில் எமது உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய அளவிற்கு உள்ளது.

சில மாதங்களுக்கு முன் ஒரு வயோதிபப் பெண் பஸ் நிலையத்தில் வாகனத்தால் மோதப்பட்டு ஆஸ்பத்திரியில் மரணம் எய்தியது யாவரும் அறிந்த உண்மை காரணம் யாராய் இருக்கலாம்? இன்றைய பஸ்நிலையத்தின் இடவசதியின்மையும், நெருக்கடியுமே நிச்சயம் இதற்குக் காரணமாய் உள்ளது என்பது கண்கூடு. வடபகுதியில் உள்ள சகல [illegible] பொதுமக்களும், பத்திரிகைகளும் தற்சமயமுள்ள பஸ் நிலையத்தின் சீர்கேட்டையும் அதை மாற்றவேண்டிய அவசியத்தைப் பற்றியும் பலமுறை பலரிடமும் எடுத்துக் கூறியுள்ளன. ஆனல் அதிகாரத்தில் உள்ளோருக்கு செவிடன் காதில் சங்கு ஊதியது போல் இருக்கிறது இன்றைய நிலை. யாழ்ப்பாணம் மாநகர சபை பல காலங்களுக்குப் பின் இன்று இளமையும் உற்சாகமும் உள்ள ஒரு முதல்வரைக் கண்டுள்ளது. அன்னராவது யாழ். பஸ் நிலையத்தின் சீர்கேட்டை நேரில் கண்டு ஆவன செய்வாரா?

எமது பழைய பஸ்நிலையம் யாழ். மத்தியில் எருக்கலை விளையும் பூமியாக உள்ளது. இந்த அவக்கேடான நிலையைநிவர்த்தித்தால்அது பொதுமக்களுக்குச் செய்யும் பெரும் சேவையாகும்.

தலைவர்,
வடபாக பஸ், புகையிரத பிரயாணிகள் சங்கம்.

---

# ஐயாறன் எழுதியது

இந்தியாவின் புதிய மந்திரி சபை பதவி ஏற்கும் சமயத்தில், பெரிய விமான விபத்து ஏற்பட்டுள்ளது. என்றுமே இல்லாதபடி ஓர் இந்திய விமானம் ஜெனிவாவுக்குப் பக்கத்திலே இறங்குகையில், மூடுபனி காரணமாக மலையில் மோதி, நொருங்கி 117 பிரயாணிகளும் மாண்டது பெரிய துக்கச் செய்தி. பதவி ஏற்றதும் இவ்வளவு பெரிய துக்கத்தைக் கேட்க புதிய பிரதமருக்கு எப்படி இருந்திருக்கும்!

இந்த விமானத்திலே, இந்தியாவின் தலைசிறந்த அணுசக்தி விஞ்ஞானி டாக்டர் பாபா மாண்டது, இந்தியாவுக்கு மட்டுமன்றி ஐ. நா. காரியதரிசி ஊதாண்ட் கூறியதுபோல், உலகத்துக்கே ஒரு பெரிய நஷ்டம். அணுசக்தியை, மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்துவதில் டாக்டர் பாபா வெற்றி கண்டவர். இப்பேர்ப்பட்ட பெரியவிஞ்ஞானிக்கு இப்படியான ஒரு மரணம் ஏற்படுவானேன்? ஒன்றுமே புரியவில்லை. திகைப்பாக இருக்கிறது. அணு சக்தியையும் விட ஒரு மகத்தான பராசக்தி உலகை நடத்தி வருகிறதென்பதை உலக மக்களுக்குக் காட்டத்தானு இப்படி நிகழ்ந்தது!

ஃ ஃ ஃ

ஸ்ரீமதி இந்திரா காந்தி, பிரதமர் பதவியை ஏற்று சத்தியப்பிரமாணம் எடுக்கும் சடங்கை இந்திய வானொலி ஒலிபரப்பியதைக் கேட்டேன், ஜனுதிபதி ராதாகிருஷ்ணன் ஆங்கிலத்தில் பிரமாணத்தை வாசிக்க, இந்திராஜி அதைச் திருப்பிச் சொல்லி சத்தியப் பிரமாணமெடுத்தார். அவரைப் பின்பற்றி மற்ற மந்திரிகளெல்லாம் பிரமாணமெடுத்தனர்.

இதில் ஒரு விசேஷமென்னவெனில், பிரமாணம் இருவிதமாக இருந்தது. பிரதமரும் மற்றும் சிலரும் தங்கள் பெயரால் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர். மற்ற மந்திரிகள் தெய்வத்தின் பெயரால் பிரமாணம் செய்தனர். அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு உண்மையாக இருப்பதாகவும், அரசாங்க ரகசியங்களைக் காப்பதாகவும், இந்தியாவின் நன்மைக்கு உண்மையாக உழைப்பதாகவும் பிரமாணமெடுத்தனர்.

பிரதமர் உள்ளிட்டு சிலருக்கு தெய்வத்தில் நம்பிக்கையில்லைப் போலும். மகாத்மாகாந்தி கடைசி மூச்சுவரை ராம, ராம என்று தெய்வத்தின் பெயரையே சொல்லிக்கொண்டிருந்தார். ஆனல் அவரது அரசியல் ''வாரிஸ்'' நேருஜீக்கு தெய்வ நம்பிக்கை இல்லை. அவரது புதல்வி இந்திராவும், தம் தந்தையைப் போல் பின்பற்றுகிறார் போலும்.

தெய்வமென்பதோர் சித்தம் ஏற்படுவது சுலபமா? மாணிக்கவாசக சுவாமிகள் இதைப்பற்றிப் பாடுகையில், பலதுறைப் பிழைத்த பின்னரே தெய்வமென்பதோர் சித்தம் தமக்கு ஏற்பட்டதென்றும், அப்படி ஏற்பட்ட பின்னரும் பல பல சோதனைகள் தொடர்ந்ததாயும் வர்ணிக்கிறார்.

நாத்திகமென்பது பாபமல்ல. நம்மில் எல்லோருமே வாழ்க்கையில் ஒரு சமயம் தெய்வ நம்பிக்கை இல்லாமல் இருந்திருப்பதா

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் பாபா மறைவு: விஞ்ஞானிகள் அனுதாபம்

## தலைசிறந்த விஞ்ஞானி என்று யுதாண்ட் அஞ்சலி

### 'அணுசக்திஆக்கத்துறையில் அயராதுஉழைத்தவர்'

— ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, ஜன. 24

திங்கட்கிழமை நிகழ்ந்த கோர விமான விபத்தில் பலியான இந்திய அணுசக்தி கமிஷன் தலைவர் டாக்டர் எச். ஜே. பாபாவின் மரணம் குறித்து ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் மற்றும் உலகின் விஞ்ஞானிகள் பலரும் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

**ராதாகிருஷ்ணன் அனுதாபம்**

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் விடுத்த செய்தியில்; ''இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியொருவரை நாம் இழந்து விட்டோம். ஆயிரக்கணக்கான இளம்விஞ்ஞானிகளுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தவர் டாக்டர் பாபா. இந்தியாவின் விஞ்ஞானத் துறையில் அவர் பெரும் சேவையாற்றியுள்ளார். அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்தும் திட்டத்தில் அவர் கொண்ட பங்கு அளவிட முடியாது'' என்று தெரிவித்துள்ளார்.

**இந்திரா வருத்தம்**

டாக்டர் பாபாவின் மறைவினுல் இந்திய அணுசக்தி துறை பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

**யுதாண்ட் அனுதாபம்**

''டாக்டர் பாபா தலைசிறந்த ஒரு விஞ்ஞானி'' என்று ஐக்கிய நாடுகள் பொதுக் காரியதரிசி யுதாண்ட் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் விஞ்ஞானத் துறையிலும் அவர் சேவை யாற்றியிருக்கிருர். என்றும் அவரின் மறைவு பேரிழப்பு என்றும் யுதாண்ட் தெரிவித்திருக்கிருர்.

**அணுசக்தி கமிஷன் தலைவர்**

வியன்னுவிலிருக்கும் சர்வதேச அணுசக்தி கமிஷன் தலைவர் வெளியிட்ட செய்தியில்; டாக்டர் பாபாவின் மறைவு அணுசக்தியை சமாதான வழிக்கு பயன்படுத்தும் திட்டத்துக்கு ஒரு பேரிடி என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அணுசக்தி கமிஷன் தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில்; டாக்டர் பாபா, ஆசியாவில் ஒரு பெயர் போன விஞ்ஞானி என்று தெரிவித்துள்ளார்.

டாக்டர் பாபாவின் மறைவு குறித்து இந்திய, அமெரிக்க, ரஷ்ய விஞ்ஞானிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

**கோர விமான விபத்து:**

# இரு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன

## விபத்துப் பற்றி விரிவான தகவல்கள்

புதுடில்லி, ஜன. 25

கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவுக்கருகில் கோர விபத்துக்குள்ளான ஏர் இந்திய விமான விபத்து குறித்து விபரமான தகவல் இப்பொழுது கிடைத்துள்ளது.

பம்பாயிலிருந்து நியுயோர்க்குக்குப் புறப்பட்ட இந்தவிமானம், பேரூட்டில் தங்கியிருந்து ஜெனிவா நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அப்பொழுது அடர்ந்த மேகக்கூட்டங்களும், கடும்பனியும் விண்ணை மிகவும் மறைத்திருந்து கொண்டிருந்தது. சிலமைல் தூரம் சென்றதும் ஜெனிவாவில் இறங்குவதற்காக விமானத்தின் வேகம் குறைக்கப்பட்டது அப்பொழுது உயரத்தின் தூரம் குறைந்தது. அந்தக் கட்டத்தில் இந்த விமானம் எதிர்பாராதவிதமாக மலையொன்றின் மீது மோதி சுக்குநூருகிவிட்டது. விபத்து நேர்ந்தபொழுது விமானம், 17,500 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தது. பிரான்ஸிலுள்ள அல்ப்ஸ் மலைத்தொடரில் இந்தவிபத்து நிகழ்ந்தது.

ஜெனிவாவிலுள்ள விமானக்கட்டுப்பாட்டு நிலையத்தினரின் அறிக்கையில் இந்திய விமானம் வந்து கொண்டிருந்ததை இரண்டு ரடார் சாதனங்கள் காட்டின என்றும் திடீரென ராடாரிலிருந்து இந்த விமானம் மறைந்துவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இருசடலங்கள் கண்டெடுப்பு**

சடலங்களைக் கண்டெடுப்பதில் தீவிரமாக ஈடுபட்ட பிரான்ஸ் ஹெலிகாப்டர்கள் இருசடலங்களை மட்டும் கண்டெடுத்தன. சடலங்கள் பல பகுதிகளிலும் சிதறுண்டு கிடப்பதால் எல்லாவற்றையும் கண்டுபிடிக்க இரண்டு மூன்று மாதங்கள் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விமான விபத்தில் எவருமே உயிர் பிழைக்கவில்லை. மீட்பு வேலைகள் நாளையுடன் கைவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## முதல் மந்திரி ராஜினுமா செய்வார்

புதுடில்லி, ஜன. 25

ராஜஸ்தான் முதல் மந்திரி திரு. மோகன்லால் சுக்காடியா தமது பதவியை ராஜினுமாச் செய்துவிட்டு காங்கிரஸ் கட்சியின் பொதுக்காரியதரிசி பதவியை ஏற்கவிருக்கிருர்.

அடுத்த மாதம் 9-ம் திகதி நடைபெறவிருக்கும் காங்கிரஸ் மகாநாட்டுக்குப்பின் அவர் ராஜினுமா செய்வார். 1954-ம் ஆண்டு முதல் திரு. சுக்காடியா முதல் மந்திரியாக இருக்கிருர்.

## அலகாபாத்துக்கு சாஸ்திரியின் அஸ்தி

புதுடில்லி, ஜன. 25

திரு சாஸ்திரியின் அஸ்திகளைக்கொண்டவிசேஷ ரயில் அலகாபாத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. ஸ்ரீமதி சாஸ்திரி, புதல்வர் ஹரிகிருஷ்ண, குடும்பத்தின் இதர அங்கத்தினர்கள், ஒரு மத்திய மந்திரி, எம். பி. க்கள் ஆகியோர் அதில் செல்கின்றனராம்.

நேற்று திரு. சாஸ்திரிக்காக நியுயோர்க்கில் நடைபெற்ற விசேஷபிரார்த்தனையில் ஐ. நா. விலுள்ள அமெரிக்க பிரதிநிதிதிரு. கோல்ட்பர்க் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். பைபிள்' குர்ஆன் ஆகியவற்றிலிருந்து சுலோகங்கள் வாசிக்கப்பட்டன. ஐ.. நா. உதவிக் காரியதரிசி திரு. ஜி. வி. நரசிம்மன் பகவத்கீதையின் சுலோகங்களை வாசித்தார்.

## 'பட்டம் மட்டும் போதாது'

கங்கொடவில், செவ்.

'பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுவிட்டால் மட்டும் நல்லதொரு பிரஜையாக உருவாகிவிடமுடியாது.' என வண. சுகுணகொட ஜினரத்னதேரோ இங்குள்ள பூர்வராமையா ஆலயத்தில் புதிய தர்ம பாடசாலைத் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: சமுதாயத்தின் நலனைக் கருத்தில் கொள்ளாது விரோதமான செயல்களைச் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நல்லபிரஜைகளல்ல.

பட்டம் பெற்ற சிலரின் மூளை தவருன வழியில் செல்கிறது. இது மிகவருந்தத்தக்க விஷயம். கல்வி நல்ல, நேர்மைமிக்க பண்பட்ட பிரஜைகளை உருவாககுவதற்கு உதவவேண்டும்.'

## சிரமதானம்மூலம்வீதி அமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

கைதடிநாவற்குழி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் அவ்வூர் பாடசாலைப் புதிய வீதியை சிரமதானம் மூலம் அமைத்துள்ளனர். இப்பணியைப் பாராட்டி நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. க. தம்பிப்பிள்ளை பேசும்போது, இவ்வூர் மக்களின் சேவை மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்ததென்றும், இக்கிராமத்தின் வளர்ச்சியில் மக்கள் கொண்ட ஆர்வத்தைக் கண்டு தாம் சந்தோஷமடைவதாகவும் பாராட்டினுர்.

திரு. வி. எஸ். கந்தையா, திரு. வே. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் மக்களின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

# 200 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்

## டானுங் மீது வியட்காங் கடும் தாக்குதல்

சைகோன், ஜன. 25

தென்வியட்னுமிலுள்ள இரண்டு அமெரிக்க விமானத் தளங்கள் மீது நேற்று வியட்காங்கியர் பலமாகத் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலின் போது சில அமெரிக்க டிரக்குகள் பலத்த சேதத்துக்குள்ளானது. ஒரு அமெரிக்க இராணுவ வீரர் கொல்லப்பட்டார்.

இதற்கிடையே தென் வியட்னுமிலுள்ளவியட்காங்கியர்மீது அமெரிக்க, தென் வியட்னும் துருப்புக்கள் நடத்திய கடும் தாக்குதல்களில் 200 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டானுங் விமானத் தளம்மீது வியட்காங்கியர் சுடுமையான தாக்குதல்களை நடத்திவருவதாக பின் வந்த செய்திகள் கூறுகின்றன.

# தொழில் நுட்பக் கல்வி பற்றிய காமன்வெல்த் மகாநாடு

## அக்டோபரில் லண்டனில் நடைபெறும்

லண்டன், ஜன. 25

தொழில் நுட்பஸ்தர்களுக்கு கல்வி, பயிற்சி ஆகியவை அளிப்பது பற்றிய காமன்வெல்த் மகாநாடு இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் இங்கிலாந்திலுள்ள ஹடர்ஸ்பீல்டில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. காமன்வெல்த் கல்வி அபிவிருத்திக்கமிட்டியின் ஆதரவில் இந்த மகாநாடு நடைபெறவிருக்கிறது.

காமன்வெல்த் கல்வி அபிவிருத்திக் கமிட்டி இதற்கு முன் உகண்டாவில் ஆங்கிலத்தை இரண்டாவது பாடமாக கற்பிப்பது பற்றிய மகாநாடொன்றையும் பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பிப்பது பற்றிய மகாநாடொன்றை இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் நடாத்தியது.

தொழில் நுட்ப கல்வி, பயிற்சி பற்றிய இந்த மகாநாடு தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதில் முன்னணி வகிக்கும் ஹடர்ஸ்பீல்ட் தொழில் நுட்பக் கல்விப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

(பி. டி. ஐ.)

# இந்திரா மந்திரிசபை

## துணை, உதவிமந்திரிகள் விபரம்

புதுடில்லி, ஜன. 25

திங்கட்கிழமை பதவியேற்ற இந்திரா மந்திரி சபையின் துணை மந்திரிகள், உதவி மந்திரிகள் விபரம் வருமாறு:

ஜே. எல். ஹாதி: உள்துறை

ஏ. எம். தாமஸ்: பாதுகாப்பு.

தினேஷ் சிங்: வெளிவிவகாரம்.

பூஞ்ச்சா: போக்குவரத்து, விமானம். கப்பல் வசதி, உல்லாசப் பயணம்.

பி. கோவிந்தமேனன்: உணவு, விவசாயம்.

ராம்சுபாக் சிங்: ரயில்வே.

பீ. மிஸ்ரா: தொழில்.

பி. ஆர். பகத்: நிதி.

சி. ஆர். பட்டாபிராமன் சட்டம்.

எம். சி. கன்னு: பொதுப் பணி வீட்டு வசதி.

டி. என். சிங்: இரும்பு, உருக்கு.

ஓ. வி. அளகேசன்: பெட்ரோலியம், ரசாயனப் பொருட்கள்.

ரகுராமய்யா: தொழில் நுட்ப அபிவிருத்தி, சப்ளை, சமூக பாதுகாப்பு.

சுசிலா நய்யார்: சுகாதாரம், குடும்பக்கட்டுப்பாடு.

ராஜ்பகதூர்: தகவல், ஒலிபரப்பு.

கே. எல். ராவ்: பாசனம், விசை.

ஜெகந்நாதராவ்: தொழிலாளர் விவகாரம், வேலை வாய்ப்பு, மறுவாழ்வு.

எஸ். கே. டே: சுரங்கம், உலோகம்.

**உதவி மந்திரிகள்**

பி. எஸ். நஸ்கர்: உள்துறை

எஸ். டி. மிஸ்ரா பாதுகாப்பு.

ஷாம்நாத்: ரயில்வே.

ஷாவநாஸ்கான்: தொழிலாளர் விவகாரம், வேலை வாய்ப்பு, மறுவாழ்வு.

பி. ஸி. சேத்தி இரும்பு, உருக்கு.

ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகர் சமூக பாதுகாப்பு.

டி. ஆர். சவாண் திட்டம்.

பக்த்தர்ஷன் கல்வி.

பி. எஸ். மூர்த்தி சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு.

அன்னு சாகேப் ஹண்டே உணவு, விவசாயம்.

எஸ். என். மிஸ்ரா பாசனம், விசை.

வி. சி. சுக்ளா: பார்லிமெண்ட் விவகாரம்.

பி. பகவதி பொதுப்பணி, வீட்டு வசதி.

ஸ்ரீமதி நந்தினி சத்பதி தகவல், ஒலிபரப்பு.

சர்தார் இக்பால் சிங் பெட்ரோலியம், ரசாயனப் பொருட்கள்.

ஷாபி குரேஷி வர்த்தகம்.

ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் கல்வி.

## அதிக அளவில் உணவுஉற்பத்தி

நீர்கொழும்பு, செவ்

உணவு உற்பத்தித் திட்டத்தை பெரிய அளவில் நடத்த நீர்கொழும்பிலுள்ள பாடசாலைகள் ஒத்துழைப்புக் கொடுத்து வருகின்றன.

மரிஸ் ஸ்ரெல்லா கல்லூரிக்குரிய நிலத்தில் மாணவர்கள் உணவு உற்பத்தி செய்து வருகின்றூர்கள்.

## புரட்சிசபை தலைவர் விஜயம்

கொழும்பு, செவ்.

பர்மாவிலுள்ள புரட்சிச் சபைத் தலைவர் ஜெனரல் நீவின் பெப்ரவரி மாதம் 10-ந் தேதி இலங்கைக்கு விஜயஞ்செய்வார்.

பிரதமர்டட்லியின் அழைப்பின்பேரில் விஜயம்செய்யும் அவர் இங்கு ஆறு தினங்கள் தங்குவார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கில் சுதந்திர தின ஏற்பாடுகள்

நல்லூர், புதன்

பத்தாண்டுகளுக்குப் பின் தமிழ்ப் பிரதேசங்களிற் கொண்டாடப்படவிருக்கும் சுதந்திர தினவிழா நிகழ்ச்சிகளை வலி-வடக்கு பகுதியில் மிகக் கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. காங்கேசன்துறை எம். பி. யும் தமிழரசுக்கட்சித் தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் சுதந்திரதின விழா நிகழ்ச்சிகள் அடுத்த மாதம் 4-ம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சைக்கிளோட்டம், இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் என்பனவற்றுடன், வலி-வடக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களின் பேச்சுக்களும் இடம்பெறும். இவை தவிர சுதந்திரதினத்தன்று காலை யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கில் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு, மாலையில் திறந்தவெளி அரங்கில் சுதம்ப நிகழ்ச்சி என்பனவற்றை நடாத்த யாழ்ப்பாணப் பிரதேச கலா மன்றம் ஏற்பாடுகள் செய்துள்ளது. நாட்டின் ஐக்கியத்தை உணர்த்தும் வகையில் நிகழ்ச்சிகள் ஏற்பாடாகிவருகின்றன.

## சைவப்புலவர் தேர்வுப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், செவ்.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்துக்கூடாக இலங்கையில்யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜம் நடத்திய சைவப்புலவர் தேர்வுகளில் புகுமுகத் தேர்வுக்கு 12 பேரும் இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கு 5 பேரும், சைவப் புலவர் தேர்வுக்கு 12பேரும் தோற்றினர். தோற்றியோருள் புகுமுகத் தேர்வில் 9 பேரும் இளஞ்சைவப்புலவர் தேர்வில் 3 பேரும், சைவப் புலவர் தேர்வில் 10 பேரும் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்தோருக்கு 1966-ம் வருடம் சித்திரை மாதத்தில் நடைபெறவிருக்கும் சைவப்புலவர் மகாநாட்டிற் பட்டமளித்து தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

### புகுமுகத்தேர்வு

வை. வேலாயுதம் (கோட்டைக்காடு, ஏழாலைமேற்கு); சி. சிவஞானசுந்தரம் (உயரியநாவல், ஏழாலைமேற்கு) இ. விநாயகலிங்கம் (ஏழாலை மேற்கு); வ. பேரின்பநாயகம் (கருவேம்பன், ஏழாலை மேற்கு); நா. பழனியார் (மானியவளை, செம்பியன் பற்று); க. காங்கேசு (3-ம் வட்டாரம், நெடுந்தீவு); நா. கணபதிப்பிள்ளை (ஆசிரியர், ஆரப்பற்றை 1-ம் குறிச்சி); ச. காசிபதி (அக்கரைப் பற்று, ஆலயடிவேம்பு, 7-ம் குறிச்சி); க. சிவஞானமூர்த்தி (அக்கரைப் ற்று, 7-ம் குறிச்சி).

### இளஞ்சைவப்புலவர்

முதலாம் வகுப்பு:- கை. நமசிவாயம் (கரணவாய் தெற்கு, கரவெட்டி). இரண்டாம் வகுப்பு; வே. தங்கராசா (அக்கரைப்பற்று, 1ம் குறிச்சி, காத்தான்குடி). வை. இராமகிருஷ்ணஐயர், (5, பெய்லி வீதி, நாவலப்பிட்டி).

### சைவப்புலவர் தேர்வு

இரண்டாம் வகுப்பு:- சி. பொன்மணி (பண்டிதை, ஏழாலை மேற்கு); த. அன்னலட்சுமி (கேணிக்கரை, அளவெட்டி); சு. இரத்தினம் (பருத்தியப்புலம், குப்பிளான்); வி. ரி, செல்லத்துரை (நேசவாசர் காரைதீவு, சி. மா.); மூன்றும் வகுப்பு:- க. சிற்றம்பலம் (23, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்); கி. இராசேஸ்வரி (39/5, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்); ந. இராசரத்தினம் (செட்டிச்சோலை, அளவெட்டி); ஸ்ரீ அப்புத்துரை (மயிலங்கூடல், இளவாலை); ஜ. ஜெயமணி (பண்டிதை பழை, தெல்லிப்பழை); க. தங்கராசா (ஏழாலை மத்தி).

## மந்திரியின் வடபகுதி விஜயம்

நல்லூர், புதன்

வடபகுதிக்கு முதன்முதலாக இம்மாதம் 31-ந் திகதி விஜயஞ்செய்யும் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன மூன்று தினங்கள் இங்கு தங்கி ஆஸ்பத்திரிகளுக்கு விஜயஞ் செய்து பார்வையிடுவதுடன் தெல்லிப்பழையில் புதிய ஆஸ்பத்திரிக்கான அத்திவாரக் கல்லை நாட்டுவார்.

வடபகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகள் எல்லாவற்றையும் பார்வையிடும் அமைச்சர் யாழ்ப்பாணம் ஆயுர்வேதக்கல்லூரி சம்பந்தமான கூட்டமொன்றிலும் கலந்து கொள்வார். வல்வெட்டித்துறையில் ஆஸ்பத்திரிக்காக புதிய கட்டிடமொன்றினையும் மந்திரி திறந்துவைப்பார். காங்கேசன்துறையில் உள்ள அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பழைக்கு மாற்றப்படுவதினால் புதிய கட்டிடத்திற்கான அத்திவாரக்கல்லையும் மந்திரி நாட்டுவார்.

## 'மக்கள் சேவையே பெரும் கடமையாகும்'

நல்லூர், புதன்

''பதவி உயர்வைவிட மக்களுக்கு உதவுவதே பெரும் சேவை, மக்களுக்கு முடிந்தவரை நல்ல பணிகளைச் செய்யவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும்'' என்று சுன்னாகம் பொலிஸ் நிலைய அதிகாரியாகக் கடமையாற்றி காங்கேசன்துறைக்கு மாற்றலாகிச் சென்றுள்ள திரு. எஸ். விக்கினேஸ்வரமூர்த்தி அளவெட்டி மக்கள் தமக்கு அளித்த பாராட்டுபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அளவெட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் விருந்துபசாரம் நடைபெற்றது. திரு. மூர்த்தியின் சேவையைப் பாராட்டி வேறுபலரும் பேசினர்.

## வித்தியாதரிசிகளுக்கு இடமாற்றம்

பம்பலப்பிட்டி, செவ்.

மாவட்டங்களில் நீண்டகாலமாக சேவை புரிந்து வந்த பாடசாலை வித்தியாதரிசிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனத் தெரிய வருகிறது.

இந்த இடமாற்றத்தை செயல்படுத்துமாறு கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை வித்தியாதிபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலை வித்தியாதரிசிகள் பல காலமாக ஓரிடத்தில் சேவை செய்துள்ளார்கள் என்றும் கல்வி திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் பல மோசடிகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் புகார்கள் மந்திரிக்குச்செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த இடமாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

## முல்லைத்தீவுக்கு இரட்டைத்தட்டு பஸ்

குமுழமுனை, செவ்.

முல்லைத்தீவுப் பகுதியின் போக்குவரத்துச் சேவை பற்றி ஆராவதற்கென வவனியா எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம் தலைமையில் முல்லைத்தீவு பட்டினசபை மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இ. போ. ச. உயர் அதிகாரிகளும் தண்ணீரூற்று பிரயாணிகள் சங்கமும் உள்ளூராட்சிமன்றத் தலைவர்களும் மற்றும் நகர பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவை தனித்து இயங்கும் டிப்போவாக மாற்றி இங்கு புதிய பஸ்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் நாயாறு, முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய உள்ளூர்ச்சேவைகளுக்கு ஒரு இரட்டைத்தட்டு பஸ் வேண்டுமென்றும், யாழ்பாணத்திற்கு இங்கிருந்து 'எக்ஸ்பிரஸ்' பஸ் புறப்பட வேண்டுமென்றும் இ. போ. ச. உயர் அதிகாரிகளை பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

இக்கோரிக்கைக்குப் பதிலளித்த இ. போ. ச. அதிகாரி மிக விரைவில் வந்து சேரவிருக்கும் புதிய பஸ்களில் 50 முல்லைத்தீவுக்கு அனுப்பப்படுமெனவும் அதன்பின்பு டிப்போவும் தனித்து இயங்கும். உள்ளூர் சேவைகளைத் திறம்பட நடத்த இம்மாதம் 26-ந் திகதி இங்கு ஒரு இரட்டைத்தட்டு பஸ் அனுப்பப்படுமெனவும் கூறினர். இ. போ. ச. அதிகாரிகளும் வவுனியா எம். பி. யும் இரட்டைத்தட்டு பஸ் ஓடஇருக்கும் பாதைகளைப் பார்வையிட்டதுடன் ஒரு புதிய இ. போ. ச. டிப்போவுக்கான இடத்தையும் தெரிவுசெய்தனர்.

## அரசாங்கத்தின் பண உதவி

பிலியந்தல, செவ்.

புதிய மாதிரிச் சந்தையொன்றை கட்டுவதற்காக பிலியந்தல பட்டினசபைக்கு மத்திய அரசாங்கம் 75,000 ரூபா கடனாக உதவியுள்ளது.

## சூறாவழியால் பாதிக்கப்பட்ட ஆலயப் புனருத்தாரணம்

நல்லூர், செவ்வாய்

யாழ்ப்பாணம் கின்னர் லேன் மாரியம்மன் கோவில் கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக செயற்குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. சூறாவளியின் போது முற்றிலும் பாதிக்கப்பட்ட இந்த ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ள செயற்குழு இவ்வாலயத்தை விரைவில் சீராக்கலாம் என நம்பிக்கை தெரிவித்துள்ளது. ஆலயத் திருப்பணிக்கு உதவும் பொருட்டு யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் எதிர்வரும் வியாழக்கிழமை 'சம்பூர்ணமகாபாரதம்' என்னும் தமிழ்ப்படம் உபகாரக் காட்சியாகக் காண்பிக்கப் படவிருக்கிறது.


# அன்பின் இன்பக் கனி



அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி,
ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்
வளர்வதைக்கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.




துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும்
குழந்தைகள் பேலனுன சுக வளர்ச்சி பெறுகிறுர்கள்.

# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு

ஒஸ்டர்மில்க் குழந்தைப் புத்தகம் ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள
கீழ்கண்ட விலாசத்திற்கு 10 சத முத்திரை அனுப்பவும்
... பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு

173/65


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேயிலை திருடியவருக்கு 3 மாத கடூழியம்

நுவரேலியா, செவ்வாய்

72 ருத்தல் தேயிலையை திருடியதாக வேலுசாமி என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கில் நுவரேலியா மாஜிஸ்டிரேட் 3 மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## 4 லட்சம் நன்கொடை

கொழும்பு, செவ்.

கல்விஇலாகாவிற்கு ஆசிய நிறுவனம் தற்பொழுது வியாங்கொடையில் நிறுவப்பட்டுவரும் விஞ்ஞான தொழிற்சாலைக்கு உபகரணங்கள் பெறும் பொருட்டு 4 லட்சம்ரூபா நன்கொடை வழங்கும்.

ஆடர் வேலைகள் செய்து கொடுக்கும் ஸ்தாபனம்

பாஷன் பேணிஷிங் பலெஸ்

5-7, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

REGAL--JAFFNA

NOW SHOWING

Rock Hudson

Burl Ives

in

THE SPIRAL ROAD

(Eastman Color)

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

எஸ். எஸ். ஆர். - தேவிகா

நடித்த

அன்பு எங்கே?

நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி-6-30, 9-30 மணி

விடுமுறை நாட்களில் 2-30 மணி

டி. எம் சௌந்தரராஜன்

நடித்த

பட்டினத்தார்

## மாணவன் விடுதலை

வல்வெட்டித்துறை, செவ்.

கரணவாய்வடக்கைச்சேர்ந்த கந்தையா பிள்ளையினுர் என்னும் மாணவன் அதே ஊரைச்சேர்ந்த கிட்டிணர் வல்விபுரத்திற்கு இரும்புக் கம்பியால் அடித்துக் காயப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ருேபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்பின் நீதிபதி எதிரியைச் சுற்றவாளியாகக் கண்டு விடுதலைசெய்தார்.




## கொழும்பு

புதன் 26 - 1 - 66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை. 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15படத்திலிருந்து.

இரவு 6-45 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-30 உங்கள் பிரச்னை, 8-00 மூஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வீணை, 9-30 பாட்டு, 10-00 நேயர் விருப்பம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | நவா (கொம்பனித்தெரு) | விஜயா (மட்டக்களப்பு) |
| மொடேர்ன் (பண்டாரவளை) | மொடேர்ன் (பதுளை) | விஜிதா (அட்டன்) |
| தீவொளி (நூரளை | கல்யாணி (நாவலப்பிட்டி) | சந்தியா (கம்பளை) |



பூம்புகார்

எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி

கே. பி. சுந்தராம்பாள்,

ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே தேவர்

மற்றும் பலர் நடித்து

அனேகரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.

வெலிங்டன்

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30.

விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு

என். டி. ராமராவ் - மாலதி

நடித்த

பாதாளபைரவி

## பிரயாணிகள் சங்கம் பேட்டி

வல்வெட்டித்துறை, செவ்.

வடமராட்சி பஸ் பிரயாணிகள் சங்கத் தூதுக்குழு ஒன்று இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்ப்பாண மாவட்ட மேலதிகாரியைப் பேட்டிகண்டு அப்பகுதிகளின் குறைகளை எடுத்துரைத்தது. குறிப்பாக கொடிகாமத்திற்கு இரவு யாழ்தேவிக்கென ஒருபஸ் மாத்திரமே சேவை செய்வதாயும் இரு பஸ்கள் சேவை செய்தால் பிரயாணிகளுக்குச் சௌகரியத்தைக் கொடுக்குமென்றும் நண்பகலில் நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய இரு பிரதான வீதி வழியாலும் கடுகதி பஸ் சேவை நடைபெறவேண்டுமெனவும், அல்வாய்ஊடாக சேவைசெய்யும் பஸ் குறிக்கப்பட்ட நேரத்திற்கு செல்வதில்லையென்றும் தூதுக்குழுவினர் தெரிவித்தனர். தற்பொழுது மாலிசந்தியில் பஸ் நிற்பாட்டும் நிலையமுள்ள இடமாக இருப்பதாகவும் அதற்கு அருகாமையில் நல்லஇடம் இருப்பதால் அதனைத் தெரிவு செய்து பாவிக்கலாமெனவும் தூதுக்குழுவினர்சிலர் சிபார்சுசெய்தனர். பஸ்களில் பிரயாணிகளை ஏற்றிவிட்டு ரிக்கற் போடும்முறையை மாற்றியமைப்பதாகவும், நெல்லியடியில் ஒருரைம்கீப்பரை நியமிப்பதுபற்றியும்மற்றும் குறைகளையும்வடமராட்சிப் பகுதிக்குவரவிருக்கும் 8 புதியபஸ்கள் வந்ததும் நிவர்த்தி செய்துவருவதாகவும் மேலதிகாரி வாக்குறுதியளித்துள்ளதாக அறியப்படுகிறது.

தூதுக்குழுவில் திரு. கே. அருளம்பலம், திரு. சி. பாலசிங்கம், திரு. க. மாணிக்கநாயகம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

## விளையாட்டுக் கழக கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

சென்ற வியாழக்கிழமை மாலை 8 மணியளவில் வண. பிதா பி. சந்தியாபிள்ளை ஓ. எம். ஐ. தலைமையில் பாஷையூர் அர்ச். அந்தோனியார் விளையாட்டுக் கழக பொதுக்கூட்டம் குருமனையில் நடைபெற்றது. உபசெயலாளர் திரு. எ. பாலதாஸ் வருடாந்த அறிக்கையும், பொருளாளர் அறிக்கையும் சமர்ப்பித்தார். ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாக பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர்: வண. பிதா பி. சந்தியாபிள்ளை ஓ. எம். ஐ. உப தலைவர்: திரு. ஆர். இம்மனுவல், செயலாளர்: திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை, உபசெயலாளர்: திரு. பி. யேக்கப், பொருளாளர்; திரு. பி. அந்தோனிப்பிள்ளை, உப பொருளாளர்: திரு. கே. சூசையா.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: ரி. ஜெயக்கொடி, எம். ஜோட்ச், எம். சிறில், எம். பீலிக்ஸ், எ. பவுல்தாஸ்.

## கிராம சேவையாளர் இடமாற்றம்

வட்டுக்கோட்டை, திங்.

வட்டுக்கோட்டை மேற்கு கிராம சேவையாளராகக் கடந்த மூன்று வருடங்களாகக் கடமையாற்றிய திரு. வஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ், அடுத்த மாதம் தொடக்கம் பண்டத்தரிப்பு கிராம சேவையாளர் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்புக் கிராம சேவையாளர் திரு. வி. செல்வநாயகம், வட்டு. மேற்கு கிராம சேவையாளராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

## மாணவர் கஷ்டம்

அச்சுவேலி, செவ்.

சென்ற வருடம் ஆகஸ்ட் மாத பொதுத் தராதரப் பரீட்சையில் வெளிமாணவியாகத் தோன்றிய அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவருக்கு வந்த பரீட்சை முடிவில் அவர் எடுத்த தாவரசாஸ்திரப் பாடத்துக்கு சித்தியடைந்தது பற்றியோ அல்லது சித்தியடையத் தவறியது பற்றியோ எதுவித குறிப்பும் குறிப்பிடாமல் விடப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இவர் பல தடவை கல்வி இலாகாவுடன் தொடர்புண்டதன் பேரில் இவர் தரவரசாஸ்திர பாடத்தில் சித்தியடைந்துள்ளதாகஅறிவித்தல் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பரீட்சை முடிவு அனுப்பப்பட்டபோது இதுபற்றி தெரிவிக்கப்படாததால் இம்மாணவி தமது படிப்பைத் தொடர்ந்து படிக்க முடியாதவாறு கஷ்டத்துக்குள்ளானுர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல் நோயாளர் அவதி

குமுழமுனை, செவ்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் இருக்கும் பல் சிகிச்சை நிலையத்திற்குஇவ்வளவுகாலமும் ஒவ்வொரு வாரமும் புதன் வியாழக்கிழமைகளில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பல் டாக்டர், புதிய போயாவிடுமுறைத் தினங்களால் ஒவ்வொரு வாரமும் தாம் இங்குவரும் கிழமைகளைத் தற்போது மாற்றிவருவதனுல் பல் சிகிச்சை பெறுவதற்குவரும் நோயாளிகள் சில தடவைகளில் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டியுள்ளது. கொக்கிளாய், தேவிபுரம், ஆகிய தூர இடங்களில் இருந்து முல்லைத்தீவு பல்சிகிச்சை நிலையத்திற்குவருபவர்களே இதனுல் மிகவும் கஷ்டமடைகின்றனர்.

## ரூபா 200 அபராதம்

கொழும்பு, செவ்வாய்

பயங்கர வெடிகளை வைத்திருந்ததாக மொறட்டுவையைச்சேர்ந்த முத்தையா பாண்டியன் என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கில், பாணந்துறை மாஜிஸ்டிரேட் 200 ரூபா அபராதம் விதித்தார்.

## ஐயா றன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும், வாழ்க்கையில் அனுபவம் ஏற்பட, தெய்வ நம்பிக்கையும் ஏற்படுவதாகவும் சுவாமி ராமதாஸ் கூறியுள்ளார். விஞ்ஞானத்தையும் அணுசக்தியையும் விட ஒரு பெரிய சக்தி இருப்பதை புதிய பிரதமருக்கு உணர்த்தத்தான், பதவி ஏற்ற தினத்தில் இந்த விமான விபத்து ஏற்பட்டதா?

எப்படியும் உலகமனைத்துக்கும் ஆத்மீகச் செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுத்து பெருமைபெற்ற பாரதநாட்டின் புதிய பிரதமருக்கு தெய்வநம்பிக்கை இல்லாததை உணர எனக்கு ஒருவிதமாகத்தான் இருந்தது.

ஃ ஃ ஃ

நாதன் நம்மை ஆள்வானென்று நவின்றேத்திப், பாதம்பன்னுள்பணியும் அடியார் தங்கள்மேல், ஏதந்தீர இருந்தான் வாழும் ஊர் போலும், வேதத்தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

வரிவிளம்பரம்

**திருமண அழைப்பு**

வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் காலை 11 மணிவரையில் வரும் சுபமுகூர்த்தத்தில் நவாலி சிந்தாமணி விநாயகர் கோவில், பிரம்மஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் மருமகனும்ச. சண்முகக்குருக்கள் புத்திரனுமாகிய சிரஞ்சீவி சுப்பிரமணிய ஐயர் அவர்கட்கும்நவாலியூர் அஷ்டகிரிக் கந்தசுவாமி கோவில்குரு பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களின் புத்திரி ஸ்ரீ வரமங்கை அம்மாளுக்கும் திருமணம் நடைபெறும். அன்பர்கள், உறவினர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றுர்கள். 1808

**தேவை**

வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் வர்த்தகக் கடிதத் தொடர்பில் அனுபவமுள்ளவரும், கணக்குப் பதிவியல், தட்டச்சு ஆகியவை தெரிந்தவருமான1 ஆண் கலைப்பட்டதாரிக்கு வேலை உண்டு. சம்பளம் மாதம் ரூ. 200ம் ஊழியர் சகாயநிதியும். விளம்பர இல: 1799, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1799

கீழ்க்காணும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை. மத்தியவங்கி குமாஸ்தாக்கள், கரும்புத்தொழிற்சாலை உவல்டர், பிற்ரர், கடைச்சல் வேலைக்காரர், நெசவுத் தொழிற்சாலை குமாஸ்தாக்கள்: தராதரம் எஸ். எஸ். சி. விண்ணப்பிக்கவும். முழுவிபரங்களுக்கும் மனுப்பத்திரத்திற்கும் ரூபா 2/- போஸ்டல் ஓடர் உடன். றஸ்ற் டுப்பிளிகேற்ரர், கீரிமலைவீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 1807

**விற்பனைக்கு**

தெல்லிப்பளை கோவிற்பற்றில் வசிப்பவரான முத்துக்குமாரு, சுப்பிரமணியம் என்பவரின் அம்பட்டாவத்தை என்னும் காணி செய் பயிர் வான்பயிர்களுடனும், கிணற்றுப் பங்குடனும் பரப்புத் தொகை 5 பரப்பும் 3/4 குழியும் விற்பனைக்கிருப்பதால், அம்பட்டாவத்தை P. W. D. ருேட்தார் போடப்பட்டு முடிவடையும் இடத்தில், ருேட்டுக்கு வடக்குப் பக்கமாகவுள்ள காணி விற்பனைக்கிருப்பதால்வாங்க விரும்பினோர் யாராயினும் ஒரு கிழமைக்குள் விண்ணப்பிக்கவும். இக்காணி கடைகட்டவும் வீடு கட்டவும் உகந்தது. பரப்பு 1700 ரூபா அல்லது அதற்குக் கிட்டிய விலை. விண்ணப்பக்காரர் மு சுப்பிரமணியம், கோட்ருேட் மல்லாகம். 1803

## 110 வருடங்கள் வாழ்ந்தார்

உடுப்பிட்டி. செவ்.

வதிரி தேவரையாளி மணலாவத்தை என்னுமிடத்தைச் சேர்ந்த மூதாட்டி ச. சின்னக்குட்டி என்பவர் தமது 110-வதுவயதில் காலமானுர். இவர் தமது இறுதிக் காலத்தில் நல்ல திடகாத்திரமாக இருந்தாரென்றும் கூறப்பட்டது. இவருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் அனேக பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் உள்ளனர்.

## 2 மாதத்தில் வேலைஆரம்பம்

காலி, செவ்.

காலியில் நிறுவப்படும் சிமெந்துத்தொழிற்சாலையில், இரண்டு மாத காலத்தில் வேலை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் வலைகள் திருட்டு பற்றி ஆராயப்பட்டது

நல்லூர், செவ்வாய்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது அதிகரித்து வரும் நைலோன் மீன்பிடி வலைகள் திருட்டைத் தடுப்பதற்குரிய வழிவகைகளை ஆராயும் பொருட்டு யாழ்ப்பாணம் கச்சேரியில் கூட்டப்பட்ட மகாநாடு எவ்வித முடிவுமின்றி வேறொரு திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. டி. டபிள்யு. செல்வரத்தினம் மீனவர்களின் பிரதிநிதிகள், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், மாநகரசபை உறுப்பினர் திரு. ஜே. எஸ். அழகையா ஆகியோர் கலந்துகொண்ட மகாநாடு ஒன்றினை கச்சேரியில் கூட்டினார்.

அதிகரித்து வரும் மீன்பிடித் திருட்டுச் சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இம்மகாநாட்டில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதி மீனவர்களுக்குரிய வலைகளின் நிறங்களை மாற்றுவதன் மூலம் திருட்டினை கண்டுபிடிப்பது சுலபம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். மாவட்ட இணைப்புக்கமிட்டிக் கூட்டத்தில் ஆராயப்பட்டு பார்லிமெண்ட் வரை இவ்விஷயத்தைக் கொண்டுசெல்வதென்று திரு. ஜே. எஸ். அழகையா ஆலோசனை தெரிவித்தார்.

நைலோன் வலைத் திருட்டுச் சம்பந்தமாக பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டதாயினும் தீர்க்கமான முடிவு எதுவும் செய்யப்படாமல் மகாநாடு வேறு ஒரு தினத்திற்குப் பின் போடப்பட்டது.

## சாஸ்திரி மறைவு

### பார்லிமெண்ட் அனுதாபம்

கொழும்பு, செவ்.

பார்லிமெண்ட் இன்று பகல் கூடிய பொழுது காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியின் மறைவு குறித்து அஞ்சலிசெலுத்தப்பட்டது.

அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையை சபைமுதல்வர் திரு. சி. பி. டி. சில்வா முன் மொழிந்தார். எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பின் மொழிந்தார்.

பார்லிமெண்டில் இரு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. சாஸ்திரியின் சேவையை பலர் பாராட்டிப் பேசினர்.

## விசர்நாய்த் தொல்லை

உடுப்பிட்டி, செவ்.

நெல்லியடி பட்டின சபையின் முதலாம் வட்டாரத்தில் இரும்புமதவடியிலிருந்து ஆலங்கட்டை மயானம் வரை செல்லும் பாதையில் பாதசாரிகள் இரவு பகலாகப் போக்குவரத்துச் செய்ய முடியாதபடி விசர்நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. சமீபத்தில் இரண்டு பேருக்கு விசர்நாய்கள் கடித்து ஆபத்தான நிலையில் உள்ளனர். இதுபற்றிப் பட்டின சபைத் தலைவருக்குத் தேவரயாளிப் பகுதி மக்கள் புகார்க்கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

## மாவிட்டபுரம் வேதாகம பாடசாலை

நல்லூர், செவ்.

மாவிட்டபுரத்தில் நடைபெற்றுவரும் வேதாகம பாடசாலையை அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கம் அங்கீகரித்துள்ளது.

அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கச் செயற்குழு கொழும்பிற்கூடிய போது மாவிட்டபுரம் வேதாகம பாடசாலையை அங்கீகரிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பரிசு பெற்றவர்கள்

உடுப்பிட்டி, செவ்.

கொக்குவிலிலுள்ள யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம் நடாத்திய தமிழ் பேச்சுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:- முதல் பரிசு: செல்வன் கிருஷ்ணபிரசாத், இரண்டாவது: செல்வன் க. பேரம்பலம், மூன்ருவது: செல்வன் சி. கமலநாதன், வித்துவான் க. வேந்தனர் தலைமையில் மூவர்கொண்ட ஆசிரியர்குழு போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தது. இப்போட்டிக்கு மாணவர் மன்றத் தலைவர் திரு. க மகேந்திரா தலைமைவகித்தார்.

## வீதி சீர்கேடு

நல்லூர், செவ்.

யாழ்ப்பாணம்—காங்கேசன்துறை பிரதான வீதி மிகவும் அவலமான நிலையில் காணப்படுகிறது. தெருவெங்கும் கிடங்கும் பள்ளமுமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. இதனுல் இப்பாதையிற் பிரயாணம் செய்யும் ஆயிரக்கணக்கானேர் அல்லற்படுகின்றனர். போக்குவரத்து வாகனங்கள் இப்பாதையில் செல்லுவதினுல் விரைவில் பழுதடைகின்றன.

ரேட்டைச் செப்பனிடத் தெருவோரத்தில் கற்கள் குவிக்கப்பட்டுள்ளனவாயினும் வேலைகள் தாமதிக்கப் படுவதற்குத் தார் போதிய [illegible] இல்லாமையே காரணமெனக்கூறப்படுகிறது.

# இந்திய - பாக். சமாதானத்துக்கு ஒரு புதிய சூழ்நிலை

## டாஷ்கண்ட் பிரகடனம் பற்றி பிரதமர் இந்திரா

புதுடில்லி, ஜன. 25

''டாஷ்கண்ட் பிரகடனம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சமாதானத்துக்கான புதிய சூழ்நிலையொன்றை ஏற்படுத்தியுள்ளது' என்று இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்திபொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்றபின்னர் திருமதி இந்திராகாந்தி நேற்று முஸ்லிம்கள் கூட்டமொன்றில் உரைநிகழ்த்தினுர். அப்பொழுது அவர் டாஷ்கண்ட் பிரகடனம் குறித்து விளக்கமாகக் கூறினுர்.

''இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிலவும் காஷ்மீர் பிரச்னை உள்ளிட்டு பல பிரச்னைகளையும் டாஷ்கண்ட் பிரகடனம் தீர்த்து வைக்கும் என்று நம்புகின்ருேம். டாஷ்கண்ட் பிரகடனத்தின் முழு அம்சங்களையும்நிறைவேற்றுவதே எமது முதல் நடவடிக்கை என்றும் திருமதி இந்திரா கூறினுர்.

இந்திய மக்களை வாட்டி வதைக்கும் வறுமை, பட்டினியை ஒழித்துக்கட்ட சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் திருமதி இந்திராகாந்தி கூறினுர்.

## அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினுர்

புதுடில்லி, ஜன. 25

கோரவிபத்துக் குள்ளான இந்திய விமானத்தில்பிரயாணம் செய்த இந்திய நீர்ப்பாசன மந்திரி டாக்டர் கே. எல். ராவ் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பம்பாயிலிருந்து புறப்பட்ட இந்த விமானத்தில் டாக்டர் ராவும் பிரயாணம் செய்தார். ஆனுல், இவ்விமானம் புதுடில்லியை அடைந்ததும் டாக்டர் ராவ் இறங்க வேண்டி நேர்ந்தது. பிரயாணிகள் பட்டியலில் இவரின் பெயர் தவறுதலாக விடப்பட்டிருந்ததேகாரணமாகும்

## சந்தேகத்தின்மீது ஐவர் கைது

யாழ்ப்பாணம். செவ்.

மூவாயிரம்ரூபா பெறுமதியான நைலோன் வலைகள் நயினுதீவில் களவு போனது சம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பொலிசார் ஐந்து பேரைக் கைது செய்துள்ளனர்.

கரையூரைச் சேர்த்த ஜோசப் அல்பிறட் என்பவருக்குச் சொந்தமான நைலோன்வலைகள் திருட்டுப் போனதுகுறித்து நடராசா, குட்டி, கிறிஸ்தோபர், கந்தையா, வேலாயுதம் ஆகிய ஐவரும் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் அதிகாரி ஏ. ஜே. இடமல்கொட விசாரணை நடத்திவருகிருர் ந. நி.

## ஆலய உற்சவம் ஆரம்பம்

நல்லூர், புதன்

காங்கேசன்துறை குருநாத சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. உபந்நியாசம், இசைநிகழ்ச்சி என்பனவற்றுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நிர்வாகசபை

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தெற்கு சன சமூகநிலைய விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவில் திரு. புண்ணியசிங்கம் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக ம. பற்குணம் தெரிவு செய்யப்பட்டார். பிரதம செயலாளராக திரு. சு. முத்துராசாவும், உபசெயலாளராக சுந்தசுரேசனும் தனுதிகாரியாக எஸ். சீவரெத்தினமும், உலகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினர்களாக செ. கனகராசா, சு. துரைராசா, தவேந்திரன், நவரட்னராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## 39 பேர் சாட்சியம்

கொழும்பு, செவ்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கமிஷன்முன் இதுவரை 39பேர் சாட்சியமளித்துள்ளனர். கமிஷன் விசாரணை மார்ச் மாதம் முடிவடையும் என அறியப்படுகிறது.

## அடுத்த 7 நாட்கள்

- ஜன. 27 வியா: தியாகராஜ சுவாமிகள் குரு பூசை.
- ஜன. 28வெள்: போயா தினம்.
- ஜன. 29 சனி: அட்டமி.
- ஜன. 30 ஞாயிறு; மகாத்மாகாந்தியடிகள் அமரதினம், நவமி.
- ஜன 31 தி—
- பெப். 1 செவ். —
- பெப் 2 புதன்: தேவமாதாவின் சுத்திகரதிருநாள், கண்ணப்பர் குரு பூஜை.

## "மலாயன் பஜெட்"

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பொது நூல்நிலையத்தில் மக்கள் பலரின் விருப்பத்திற்கிணங்க 'மலாயன் பஜெட்' வாரசஞ்சிகை வரவழைக்கப்பட்டுள்ளது. விரும்பியபவர்கள் சென்று பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அண்ணனுக்குத் தூக்கு; தம்பிக்குச் சிறை

களுத்துறை, செவ்,

களுத்துறை அசைஸ் நீதிமன்றத்தில் நடைபெற்ற கொலைவழக்கொன்றில், எதிரிகளான மூத்த சகோதரருக்கு மரண தண்டனையும், இளைய சகோதரருக்குச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

திருமதி சிவக்கொழுந்து குமாரவேலு காலமாகிவிட்டார். இவர் யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியையும், உரும்பராய் தெற்கு 'அமுதசுரபி' யில் உரிமையாளர் திரு. செ. சீவரத்தினத்தினதும் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. செ. குணபாலசிங்கத்தினதும் மைத்துணியும், கந்தர்மடம் திரு. ஏ. ஆர். ஆறுமுகம் தம்பதிகளின் மாமியுமாவர். அன்னுரின் பூதவுடல் உரும்பராய் வேம்பன் மயானத்தில் 26-1-66 புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் தகனம்செய்யப்படும்.— 'சிவகுமரகிரி', உரும்பராய் தெற்கு. 1812

## இந்திய . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி

### ஹரிஜனங்களுக்கு விசேஷ சலுகைகள்

இந்திய சாசனத்தின் அடிப்படை உரிமை சரத்தில் சில விசேஷ சலுகைகளும் விதிவிலக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஹரிஜனங்கள், மற்றும் சமூகக் கல்வித் துறைகளின் முன்னேற்றமடையமக்கள் ஆகியோருக்கு அரசாங்க உத்தியோகங்கள் கல்விவசதிகள் போன்றவற்றில் விசேஷ சலுகைகள் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இச்சமூகத்தவரினும் மற்றவர்கள் அடைந்துள்ள அளவு முன்னேற்றம் அடையவேண்டும் என்பது கருதியே இவ்வித சலுகை அளிக்கப்பட்டுள்ளது. சாதி சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டுவதற்குச் தடைவிதிக்கப்பட்டிருந்த போதிலும் சாதி வேற்றுமையை ஒழிக்க சாசனத்தின் விசேஷ ஷரத்துவகை செய்கிறது.

### சமய வழிபாட்டு சுதந்திரம்

மதசுதந்திரமும், அந்தந்த மதங்களை அனுஷ்டிக்கும் உரிமையையும், மதஸ்தாபனங்களை நிர்வகிக்கும் உரிமையையும், இந்திய அரசியல் சாசனம் உறுதிப்படுத்துகின்றது.

### குறைபாடு நிவிர்த்திக்கு உரிமை

சாசனத்தில் இல்லாத சில உரிமைகளை நிவிர்த்திசெய்து சட்டமூலம் அவற்றை அளிக்க நீதிபரிபாலனம் அநுமதிக்கப்பட்டுள்ளது. அந்த உரிமை எவ்விதமானதாக இருக்கவேண்டும் என்பதை நீதி பரிபாலனமே நிச்சயித்துக்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளதெனினும் அவை ''நியாயமான''தாக இருக்கவேண்டும் என்பது விதியாகும். ,

### தனிப்பட்ட சுதந்திரம்

தனிப்பட்டவர் சுதந்திரத்தை 'சட்ட ஒழுங்கிற்கமைய' கைக்கொள்ள வேண்டுமென்ற விதிவிலக்குத் தவிர தனியார் வாழ்க்கைச்சுதந்திர உரிமை பூரணமாக அளிக்கப்பட்டுள்ளது. தனியார்ஒருவரின் உடமைக்கும் அரசியல் சாஸனம் பாதுகாப்பு அளிக்கிறது. எனினும் சமூக முன்னேற்றத்துக்காக, பொது நலனுக்காக தனியார் உடமைக்கு நஷ்டஈடு கொடுத்து அரசாங்கம் அதை சுவீகரிக்கும் உரிமை உண்டு.

அடிப்படை உரிமைகளை எதிர்த்து சுப்ரீம்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் உரிமையே ஒரு அடிப்படை உரிமையாகும்.

அவசரகால நிலைமைதவிர்ந்த ஏனைய எந்தக் காலத்திலும் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக [illegible] தொடர ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு.

## இந்திய—பாக் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சௌத்திரிக்குமிடையே கைச்சாத்தான புதுடில்லி உடன்படிக்கையில் மேற்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன,

### ஐ. நா பார்வையாளர் தலைமையில்

படைவிலக்கல், ஐக்கியநாடுகள் ராணுவ பார்வையாளர் தலைமையில் நடைபெறும். இந்த நடவடிக்கையின் போது தகராறுகள் எதுவும் ஏற்படின் அவை ஐ. நா. பார்வையாளர்களின் மத்தியஸ்தத்துக்குவிடப்படும்.

முதலாவது படைவிலக்கல் நடவடிக்கை ஐந்துநாட்களுக்குள் முடிவடையும்.

## அபராதம்

உடுப்பிட்டி, செவ்.

வல்வெட்டித்துறை சமரபாகு என்னுமிடத்தைச் சேர்ந்த கிட்டிணன் செல்லத்துரை என்பவர்தனது மாமியாரான கணபதிபெண் தங்கத்துக்குக் கடந்த நவம்பர் மாதம்27-ந் திகதிகொட்டனுல் அடித்துக் காயப்படுத்தியதாக அவர்மீது வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ருெபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாக்க் கண்டு 25 ரூபா அபராதமும் 250 ரூபா பிணையில், இரண்டு வருட நன்னடத்தைப்பிணையிலும் செல்லுமாறு உத்தரவிட்டார். வல்வெட்டித்துறைபொறுப்பதிகாரிதிரு, எம். பி. அமிர்தநாதன் வழக்கை நடத்தினுர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org